[பேரவைத் துணைத் தலைவர்] [1981 மே 6

காவல்துறை மற்றும் தீயணைப்புப் பணிகள் குறித்த மானியக் கோரிக்கைகள் மீது மேலும் விவாதமும் பதிலுரையும் நாளை, 7—5—1981 அன்றும் தொடரும். இந்த மானியக் கோரிக்கைகள் முடிந்தவுடன், நாளை எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய மானியக் கோரிக்கை விவாதத்திற்கும் வாக்கெடுப்பிற்கும் எடுத்துக் கொள்ளப்பெறும்.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (7—5—1981) காலை 9.00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.29 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

எதுவுமில்லை.

இணைப்பு I.

[360-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண். 1005 க்கான விடையைக் காண்க.]

(அ) தமிழ்நாடு நிலவியல் பிரிவு 1979ம் ஆண்டு அக்டோபர் மாதம் முதல் 1980-ஆம் ஆண்டு மார்ச் மாதம் முடிய கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள தடிக்காரக் கோணம் என்னும் இடத்தில் விரிவான நிலவியல் ஆய்வினை மேற்கொண்டுள்ளது. மேற்கண்ட ஆய்வின் மூலமாக வைடூரியத்தில் இருவகை கற்கள் இங்கும் அங்குமாக பெக்மடைட் (Pegmatite) என்னும் பாறை விரிசல்களில் இருப்பதாகத் தெரிய வந்துள்ளது. இந்த இரண்டு வகை கற்களில் ஒவ்வொன்றிலும் 1 கேரட் (0.2gms) அளவுகொண்டு வரப்பட்டு, அதன் தன்மையை (Quality) ஆராய்வதற்காக உடைத்து, மெருகூட்டப்பட்டது. இக்கற்கள் மற்ற கற்களைப்போல் தக்கவடிவத்திலும், ஒரே இடத்திலும் கிடைக்காமல் இங்கும் அங்குமாக இருப்பதால், அதனுடைய முழுஅளவையும் மதிப்பிட இயலவில்லை. இப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு இக்கற்கள் அதிக அளவில் இங்கு இருப்பதற்கான வாய்ப்பும் இல்லை என்பதை வெளிப்படுத்துகிறது.

(ஆ) இந்த ஆராய்ச்சி முதலில் 1978 ஆம் ஆண்டு செப்டம்பரில் எடுத்துக்கொள்ளப்பட்டு, அவ்வருடம் அக்டோபர் மாதத்தில் வீரப்புலி காட்டுப்பகுதியில் அம்மாதத்திலேயே

1981 மே 6]

வேலை ஆரம்பிக்கப்பட்டது. இக்கற்களில் ''பூனைக்கண்'' என்னும் வகையானது எவ்வித குறையும் இல்லாமல் சுத்தமாக மஞ்சள் நிறத்தில் 5 கேரட் (1.0 gms) இருந்தால் அதை சிறந்த வைடுரியமாகக் கருதலாம். இங்கு நடத்தப்பட்ட ஆய்வில் 1 கேரட்டுக்கும் குறைந்த அளவு சுத்தமான வைடூரியமே கிடைத்துள்ளது.

(இ) தற்போது நிலவி வரும் நிலையில் 1 கேரட் சுத்த வைடூரியம் ரூ. 100 முதல் ரூபாய் 150 வரை பெறுமானம் உடையதாகும். இதன் விலையானது அதன் நிறம் பிரதிபலிக்கும் தன்மை ஆகியவற்றைப் பொருத்ததாகும். வாங்குவோரைப் பொருத்தும் சிலசமயங்களில் 10 கேரட் கல் ஒரு ஆயிரம் ரூபாய்க்கும் மேலான விலையைப் பெற்றுத் தரும். இத்தகைய கல் இதுவரை நடத்திய சோதனைகளில் கிடைக்கப் பெறவில்லை.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

28 APR 1982

...மன்றப் பேரவை
TAMIL NA...U LEGISLATIVE ASSEMBLY

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS